©
GOVERNMENT OF TAMIL NADU
2021

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 399A] சென்னை, திங்கட்கிழமை, செப்டம்பர் 6, 2021
ஆவணி 21, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

# பகுதி IV—பிரிவு 1

## தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

**சட்டமுன்வடிவுகள்:** *பக்கங்கள்.*

எண் 28/2021— தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டம். .. 2-6

எண் 29/2021—தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் .. 7-8

எண் 30/2021—தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் .. 9-11

**2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/2021**

**1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதியச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசால், அறிவிக்கை வாயிலாக குறிக்கலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

15 ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் 15 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்காக பின்வரும் உட்பிரிவானது, மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— தமிழ்நாடு சட்டம் 36/1972.

"(1) ஒவ்வொரு பணியாளரும் ஆண்டொன்றுக்கு ஐம்பது ரூபாய்க்கு மிகாமல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படலாகும் ஒரு தொகையினை நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு பணியமர்த்துநரும் அத்தகைய ஒவ்வொரு பணியாளரைப் பொருத்தும் ஆண்டொன்றுக்கு நூறு ரூபாய்க்கு மிகாமல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படலாகும் ஒரு தொகையினை நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும் மற்றும் அரசானது அத்தகைய ஒவ்வொரு பணியாளரைப் பொருத்தும் ஆண்டொன்றுக்கு ஐம்பது ரூபாய்க்கு மிகாமல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படலாகும் ஒரு தொகையினை நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும்".

## நோக்கக் காரண விளக்கவுரை

தமிழ்நாடு சட்டம் 44/1995 இன் மூலம் மாற்றீடு செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 15ஆம் பிரிவின், (1)ஆம் உட்பிரிவின் கீழ், ஒவ்வொரு பணியாளரும் ஆண்டொன்றுக்கு பத்து ரூபாய்க்கு மிகாமல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படலாகும் ஒரு தொகையினை நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு பணியமர்த்துநரும் அத்தகைய ஒவ்வொரு பணியாளரைப் பொருத்தும் ஆண்டொன்றுக்கு இருபது ரூபாய்க்கு மிகாமல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படலாகும் ஒரு தொகையினை நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும் மற்றும் அரசானது அத்தகைய ஒவ்வொரு பணியாளரைப் பொருத்தும் ஆண்டொன்றுக்கு பத்து ரூபாய்க்கு மிகாமல் அவ்வப்போது நிர்ணயிக்கப்படலாகும் தொகையினை நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும்.

2. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியத்திற்கான பங்களிப்புகளின் தொகையானது 2015ஆம் ஆண்டிலேயே, 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதியம் விதிகளின், 11Aஆம் விதியின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐந்து ஆண்டுகள் முடிவடைந்துவிட்டதால், கூறப்பட்ட 15ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொழிலாளர் நலநிதியத்திற்கான பங்களிப்புகளின் உச்ச வரம்பினை உயர்த்த வேண்டியது தேவையானதாகிறது. எனவே தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியமானது, அதன் 77 ஆம் கூட்டத்தில், தொழிலாளர் நல நிதிய பங்கிற்கான உச்ச வரம்பினை பணியாளரின் பங்களிப்பாக ஐம்பது ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையும், அத்தகைய ஒவ்வொரு பணியாளரைப் பொருத்தும், பணியமர்த்துநரின் பங்களிப்பாக நூறு ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையும், அரசின் பங்களிப்பாக ஐம்பது ரூபாய்க்கு மிகாத ஒரு தொகையாகவும் உயர்த்த தீர்மானம் நிறைவேற்றியது மற்றும் கூறப்பட்ட நோக்கத்திற்காக தமிழ்நாடு சட்டம் 36/1972ஐ தக்கவாறு திருத்தம் செய்ய மாநில அரசினைக் கோரியுள்ளது.

3. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய வாரியத்தின் மேற்சொன்ன முன்மொழிவினை ஏற்றுக்கொள்ளவும், 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தினை, (தமிழ்நாடு சட்டம் 36/1972) கூறப்பட்ட நோக்கத்திற்காக தக்கவாறு திருத்தம் செய்யவும், அரசானது முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. கணேசன்**,
*தொழிலாளர் நலன் -*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
***செயலாளர்.***

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவின் 2ஆம் கூறில் அடங்கியுள்ள வகைமுறைகளானது,தொழிலாளர் நல நிதிய பங்களிப்பினை அதிகரிப்பதற்கு வகை செய்கிறது. இச்சட்ட முன்வடிவு இயற்றப்படும் போதும் நடைமுறைக்கு வரும் போதும், மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து கூடுதல் செலவு செய்ய நேரிடும்.

2. இச்சட்டத்தை இயற்றுவதன் விளைவாக ஏற்படக்கூடிய கூடுதல் செலவினமானது தோராயமாக தொடர் ஆண்டிற்கு ரூ. 3,50,00,000/ (மூன்று கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய்) ஆக இருக்கும்.

**சி.வி. கணேசன்**,
*தொழிலாளர் நலன் -*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
***செயலாளர்.***

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவின் 2ஆம் கூறானது அதில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**சி.வி. கணேசன்**,
*தொழிலாளர் நலன் -*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
***செயலாளர்.***

**2021ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு. நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 29/2021**

**1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் XXXVI/1947.

**22–A** எனும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

**2.** 1947ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் 22ஆம் பிரிவுக்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"22–A. இருக்கை வசதிகள்.— அனைத்து வேலையாட்களும் தங்களது வேலையின் போது நேரிடும் அமரும் வாய்ப்பு எதையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காகவும் வேலை நேரம் முழுவதும் அவர்கள் 'நின்றுகொண்டே இருக்கும்' நிலைமையை இதனால் தவிர்க்கலாம் என்பதற்காகவும் அவர்களுக்கான தகுந்த இருக்கை ஏற்பாடுகளை ஒவ்வொரு நிறுவனத்தின் வளாகங்களும் கொண்டிருத்தல் வேண்டும்".

**நோக்கக் காரண விளக்கவுரை**

மாநிலத்திலுள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் அவர்களது வேலை நேரம் முழுவதுமாக நிற்க வைக்கப்படுகின்றனர், அதன் விளைவாக பல்வகையான உடல்நலக் கேடுகளுக்கு ஆளாகின்றனர். தங்களது வேலை நேரம் முழுவதும் தங்கள் பாதங்களிலேயே நிற்கும் வேலையாட்களின் நிலைமையை கருத்தில் கொண்டு, கடைகள் மற்றும் நிறுவனங்களின் அனைத்து வேலையாட்களுக்கும் இருக்கை வசதி வழங்குதல் அவசியமென கருதுகிறது.

2. 04.09.2019 அன்று நடைபெற்ற மாநில தொழிலாளர் ஆசோசனைக் குழுவின் கூட்டத்தில் வேலையாட்களுக்கு இருக்கை வசதி வழங்கும் பொருட்கூறானது முன்வைக்கப்பட்டது மற்றும் அது குழுவின் உறுப்பினர்களால் ஒத்தக் கருத்துடன் ஏற்கப்பட்டது.

3. எனவே அரசானது, மேற்சொன்ன நோக்கத்திற்காக, 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

4. இந்த சட்ட முன்வடிவமானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. கணேசன்**,
*தொழிலாளர் நலன் -*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
***செயலாளர்.***

**2021ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு. நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/2021**

2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு

**இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:**

1. இந்த சட்டம், 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

தமிழ்நாடு சட்டம் 27/2018. 2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:

தமிழ்நாடு சட்டம் 27/2018 "**3. கடைகள் மற்றும் நிறுவனஙகளைப் பதிவு செய்தல்:–**(1) 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்தும் மற்றும் அது முதற்கொண்டும் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் பணிபுரிகின்ற ஒவ்வொரு நிறுவனத்தின் பணிக்கு அமர்த்துநர், தன்னுடைய வணிகம் தொடங்கிய தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் பதிவிற்காக விண்ணப்பித்து பதிவுச் சான்றிதழைப் பெறுதல் வேண்டும். 3ம் பிரிவிற்கு மாற்றான பிரிவு.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய படிவம் மற்றும் அத்தகைய முறையில் இருத்தல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின்படி ஆய்வாளர், விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதன் பேரில் நிறுவனங்களைப் பதிவு செய்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கலாகிற அத்தகைய படிவத்தில் பணி அமர்த்துநருக்கு இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் பதிவுச் சான்றிதழை வழங்குதல் வேண்டும். அவ்வாறு ஆய்வாளரால் விண்ணப்பத்தை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து இருபத்தி நான்கு மணி நேர கால அளவிற்குள் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படாவிட்டால், இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழானது வழங்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) ஆய்வாளர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில், நிறுவனங்களின் பதிவேட்டை பராமரித்தல் வேண்டும்.

(5) பதிவுச் சான்றிதழானது, பணி அமர்த்துநரால் நிறுவனத்தில் முக்கியமான இடத்தில் காட்சிக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

(6) பணி அமர்த்துநர், (2) ஆம் உட்பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் எதிலும் செய்த மாற்றம் எதையும் அத்தகைய மாற்றம் செய்ததிலிருந்து முப்பது நாட்கள் காலத்திற்குள் ஆய்வாளருக்கு தகவல் அளித்தல் வேண்டும். ஆய்வாளர் அத்தகைய தகவலைப் பெற்றுக் கொண்டதன் பேரில் பதிவுச் சான்றிதழை திருத்தம் செய்தல் வேண்டும் அல்லது புதிய பதிவுச் சான்றிதழை வழங்குதல் வேண்டும்.

(7) பணி அமர்த்துநர், நிறுவனம் மூடப்பட்ட முப்பது நாட்கள் கால அளவிற்குள் அத்தகைய மூடப்பட்ட தகவலை ஆய்வாளருக்கு தெரிவித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய தகவலைப் பெற்றுக் கொண்டதன் பேரில், அவர் பதிவுச் சான்றிதழை ரத்து செய்தல் வேண்டும்.

வரம்புரையாக, நிறுவனம் மூடப்பட்ட அத்தகைய தகவலை பெற்றுக் கொண்டதல்லாது, பிறவாறு ஆய்வாளர் மனநிறைவடைகிறவிடத்து அவர் அத்தகைய பதிவுச் சான்றிதழை ரத்து செய்தல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக, பணி அமர்த்துநருக்கு முறையிடுவதற்கான ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தாலன்றி முதலாம் வரம்புரையின் கீழ் ரத்து செய்யப்படுதல் கூடாது.

தமிழ்நாடு சட்டம் 27/2018

**(8)** **(1)** ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறிருப்பினும், **2018** ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியன்று பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் பணிபுரிகின்ற தற்போதுள்ள நிறுவனத்தின் பணி அமர்த்துநர் வகுத்துரைக்கலாகிறவாறான அத்தகைய படிவத்தில் தானே செய்யப்பட்ட விளம்புகையுடன் நிறுவனத்தின் விவரங்களை **2018** ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஓர் ஆண்டிற்குள் ஆய்வாளருக்கு அளித்தல் வேண்டும். ஆய்வாளர் பணி அமர்த்துநரால் அளிக்கப்பட்ட தகவலை நிறுவனத்தின் பதிவேட்டில் பதிவு செய்த பின்பு பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்.".

6 ஆம் பிரிவிற்கு மாற்றான பிரிவு.

**3.** திருத்தச் சட்டத்தின் **6** ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:

"**6.** முதன்மைச் சட்டத்தின் **45** ஆம் பிரிவில் "பிரிவுகள் **7** முதல் **11** வரை, **13** முதல் **23** வரை, **25, 26, 29** முதல் **41** வரை மற்றும் **47**" எனும் சொற்றொடருக்காக "பிரிவுகள் **3, 7** முதல் **11** வரை, **13** முதல் **23** வரை, **25, 26, 29** முதல் **41** வரை, **47, 47 A** மற்றும் **50 A**" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்."

**நோக்கக் காரண விளக்கவுரை**

ஓர் ஆண்டில் 365 நாட்களும் இயங்குவதற்கான சுதந்திரம்; நிறுவனத்தை திறக்கும்/மூடும் நேரத்திற்கான சுதந்திரம்; மகளிருக்கான தங்கும் வசதி, ஓய்வறை வசதி, அவர்களது கண்ணியத்திற்கு போதிய பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து போன்றவற்றை வழங்கி, அவர்களை இரவுநேரப் பணியில் கலந்துகொள்ள இயலச்செய்யும்; பணியமர்த்தம், பயிற்சி, பணி மாற்றம் அல்லது பதவி உயர்வுக்கான பொருட் கூறுகளில் மகளிருக்கு எதிரான வேறுபாடின்மை; ஓர் எளிய வழி முறை மூலமான இணையவழி பதிவு; வேலையாட்களுக்கான பாதுகாப்பு மற்றும் நல நடவடிக்கைகள் போன்றவற்றை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டு மாதிரி கடைகள் மற்றும் நிறுவனங்கள் (வேலையினை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனை) சட்டமுன்வடிவினை இந்திய அரசானது முன்மொழிந்துள்ளது மற்றும் மாநில அரசுகள் கூறப்பட்ட மாதிரி சட்டமுன்வடிவினை அவ்வாறே மேற்கொள்ளவோ அல்லது மாநிலத்தின் தேவைக்கேற்ப அதன் வகைமுறைகளில் மாற்றம் செய்த பின்போ அதனை மேற்கொண்டு மாநில கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் மாற்றம் செய்யக் கோரியுள்ளது. இந்திய அரசின் ஆலோசனையின் அடிப்படையில், அரசானது 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/2018) மூலம் 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் XXXVI/1947) திருத்தம் செய்தது. ஆனால், கூறப்பட்ட திருத்தச் சட்டமானது இன்றுவரை நடைமுறைக்கு கொண்டு வரப்படவில்லை.

2. இதற்கிடையில், இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் மாநில கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தில் பதிவினை புதுப்பித்தலுக்கான வகை முறையினை கைவிடுமாறு அனைத்து மாநில அரசுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலும், தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டு துறையின் வழிகாட்டுதல்கள், மாநில கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் பதிவினை புதுப்பித்தலுக்கான வகை வழிமுறைகளை விட்டுவிடவும் மற்றும் பதிவு சான்றிதழினை விண்ணப்பித்த தேதியிலிருந்து ஒரு நாளுக்குள் வழங்குவதை உறுதி செய்யவும் அறிவுறுத்துகிறது. எனவே அரசானது, 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 27/2018) மேற்சொன்ன நோக்கத்திற்காக திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. கணேசன்,**
*தொழிலாளர் நலன் —*
*திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்.*

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.